சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் 23.02.2025 அன்று சேலம், மணக்காடு காமராஜர் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற சமுதாய வளைகாப்பு விழாவில் 150 கர்ப்பிணிப் பெண்களுக்கான தமிழ்நாடு அரசின் சீர்வரிசை பொருட்களை வழங்கினார். இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, தலைமையில், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி, சேலம் மாநகராட்சி மேயர் ஆ.ராமச்சந்திரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. உடன் சேலம் மாநகராட்சி துணை மேயர் திருமதி மா.சாரதா தேவி, சேலம் வருவாய் கோட்டாட்சியர் திருமதி அ.அபிநயா, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப்பணிகள் திட்ட அலுவலர் திருமதி சுகந்தி உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசுத்துறை அலுவலர்கள் உள்ளனர்.

பெரம்பலூர் மாவட்டம், பெரியம்மாபாளையம் ஊராட்சியில், சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் இருந்து ரூ.11.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய நியாய விலைக் கடையினை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் திறந்து வைத்து, குடும்ப அட்டைதாரர்களுக்கு உணவுப் பொருட்களை வழங்கினார்.இதில் மாவட்ட ஆட்சியர் கிரேஸ் பச்சாவ், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன்,கூட்டுறவுத்துறை மண்டல இணைப்பதிவாளர் பாண்டியன், மாவட்ட துணைச் செயலாளர்கள் தமுதாழை பாஸ்கர்,நூருல்ஹிதா இஸ்மாயில், ஒன்றிய கழக செயலாளர் எஸ். நல்லதம்பி, ஒன்றிய கழக பொறுப்பாளர் ந.ஜெகதீஷ்வரன் மற்றும் பலர் உள்ளனர்.

நமது 'முதல்வரின் காலை உணவுத் திட்டம்' வெளிநாடுகளிலும் பரவுகிறது! முதலில் கனடா நாட்டிலும், இப்போது

இங்கிலாந்து நாட்டிலும் தொடங்குகிறது!

பள்ளிகளில் ஏப்ரலில் அமலாகிறது!

லண்டன், பிப். 26 -

நமது முதல்வரின் காலை உணவுத் திட்டம் வெளிநாடுகளிலும் பரவுகிறது! முதலில் கனடா நாட்டிலும், இப்போது இங்கிலாந்து நாட்டிலும் தொடங்குகிறது.

மாணவ, மாணவிகள் பசியுடன் பள்ளிக்கு வருவதை தடுக்கும் பொருட்டு, தமிழ்நாட்டில் தொடங்கப்பட்ட காலை உணவுத் திட்டம் இந்தியா மட்டுமின்றி உலகெங்கும் பிரபல மடைந்துள்ளது. வரும் ஏப்ரல் மாதம் முதல் இங்கிலாந்து நாட்டிலும் காலை உணவுத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

இந்தியாவிலேயே முதன்முறையாக ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலக்கூடிய தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கு அனைத்து பள்ளி நாட்களிலும் காலை வேளையில் சத்தான சிற்றுண்டி வழங்கும் திட்டம் கடந்த 2022ம் ஆண்டு செப்டம்பர் 15ம் தேதி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கிவைத்தார்.

உலக நாடுகளுக்கே வழிகாட்டி!

இதனைத் தொடர்ந்து அரசு உதவிப் பெறும் பள்ளிகளிலும் இத்திட்டம் விரிவு படுத்தப்பட்டது. இத்திட்டம் மூலம் சுமார் 2 ஆயிரம் பள்ளிகளில் படிக்கும் லட்சக்கணக்கான மாணவ, மாணவிகள் பயனடைந்து வருகின்றனர்.

தமிழ்நாட்டைப் பின்பற்றி இத்திட்டத்தை தெலுங்கானா உள்ளிட்ட மாநிலங்களும் செயல்படுத்தி வருகின்றன. இந்தியாவிற்கு மட்டுமல்ல, உலக நாடுகளுக்கே 'திராவிட மாடல்' அரசு வழிகாட்டுகிறது.. தமிழ்நாட்டின் காலை உணவுத்திட்டத்தை கனடா அரசு , தங்களது நாட்டில் நடைமுறைப்படுத்தியுள்ளது.

இந்நிலையில், தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்ட முதலமைச்சரின் காலை உணவுத்திட்டத்தை இங்கிலாந்து அரசும் செயல்படுத்த உள்ளது. வருகின்ற ஏப்ரல் மாதம் முதல் பள்ளிகளில் காலை உணவுத் திட்டம் செயல்படுத்தப்படும் என இங்கிலாந்து அரசு அறிவித்துள்ளது. முதற்கட்டமாக 750 பள்ளிகளில் காலை சிற்றுண்டி திட்டம் செயல்படுத்தப்பட உள்ளதாக அந்நாட்டின் பெண்கள் மற்றும் சமத்துவத்திற்கான அமைச்சர் பிரிட்ஜெட் பிலிப்சென் தெரிவித்துள்ளார். காலையில் பள்ளி குழந்தைகளுக்கு கோதுமை கஞ்சி, பழங்கள், தயிர் என ஆரோக்கியமான சத்தான காலை உணவுகள் வழங்கப்பட உள்ளது. இத்திட்டத்தால் 18 லட்சம் குழந்தைகள் பயனடைவர்கள் என்று இங்கிலாந்து அமைச்சர் கூறியுள்ளார்.

காலை சிற்றுண்டி திட்டம் மூலம், மாணவர்களின் கற்றல் திறன் மேம்படும் என்றும், பல்வேறு போட்டிகளில் அவர்களும் திறம்பட கலந்துகொள்ள முடியும் என்றும் இங்கிலாந்து அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மயிலாடுதுறை மாவட்டம் பூம்புகார் சட்ட மன்ற தொகுதியில் பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம். முருகன் ஏற்பாட்டில் இரண்டாம் மக்கள் குறைதீர்க்கும் முகாம் குத்தாலம் மேற்கு ஒன்றியம் ஒன்றியம் கோமல், கொழையூர், மருத்தூர் ஊராட்சிகளுக்கு கோமலில் நடைபெற்றது.முகாமில் பொதுமக்களிடம் மனுக்களை பிற்படுத்தப்படடோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்ய நாதன் பெற்றார். உடன் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம். முருகன், மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் ஆர் சுதா, மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ராஜ்குமார், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் எம். எம்.சித்திக், மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர் சௌமியன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஜி. எம் ரவி, மாவட்ட துணை செயலாளர் எஸ் செல்வமணி, குத்தாலம் மேற்கு ஒன்றிய செயலாளர் ஏ.ஆர்.ராஜா, மயிலாடுதுறை கிழக்கு ஒன்றிய செயலாளர் ப.முருகமணி, .பொதுக்குழு உறுப்பினர் ஹர்ஷத் . ஒன்றிய குழு முன்னாள் தலைவர் மகேந்திரன் மற்றும் பலர் உள்ளனர்.

பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

மன்னார்குடியில் திராவிட மாடல் அரசின் மக்கள் நலத்திட்டங்கள்!

அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அடிக்கல் நாட்டி திறந்துவைத்தார்!

திருவாரூர், பிப். 26 - திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் ஒன்றியம், முக்குளம் சாத்தனூர் ஊராட்சியில், கருவாக்குறிச்சி கிராமத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் ரூ.77.89 இலட்சம் மதிப்பீட்டில் 2194.78 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட வுள்ள புதிய கிராம அறிவு மையம் கட்டடம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டல் மற்றும் நீடாமங்கலம் ஒன்றியம், நல்லிக்கோட்டை ஊராட்சியில் ரூ.20.30 லட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்ட சமுதாயக்கூடத்திறப்பு ஆகிய நிகழ்வுகளில் தொழில் முதலீட்டு, ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர்.டி.ஆர்.பி.ராஜா பங்கேற்று அடிக்கல் நாட்டி திறந்து வைத்தார். சட்ட மன்ற உறுப்பினர் பூண்டி. கே.கலைவாணன், தமிழ் நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி வாரிய கழகத்தலைவர் முன்னாள் அமைச்சர் உ.மதிவாணன், மாவட்ட ஆட்சித்தலைவர் மோகனச்சந்திரன்ஆகியோர் உடனிருந்தனர்.

இந்நிகழ்வில் தொழில் முதலீட்டு, ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர்.டி.ஆர்.பி.ராஜா தெரிவித்தாவது,

திராவிட நாயகர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அரசின் முயற்சியால் தற்பொழுது ரூ.20.30 லட்சம் மதிப்பீட்டில் நல்லிக்கோட்டையில் இப்புதிய சமுதாய கூடம் அமையப்பெற்றுள்ளது.

திருவாரூர் மாவட்டத்தில் பெரும்பாலும், விவசாய பெருமக்களும் மற்றும் பல துறைகளில் கடினமாக உழைக்கின்ற மக்களும் உள்ளனர். இவர்கள் அனைவரும் பயன்பெறும் வகையில் மாவட்டத்தில் விவசாயத்தினை மட்டுமே நம்பி இல்லாமல் அவர்களை மேன்படுத்தும் வகையில் விவசாயிகள் விளைவிக்கும்; விளைபொருட்களை மதிப்புக்கூடுதல் செய்து அதன்மூலம் வேலைவாய்ப்புகள் உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. மேலும், திருவாரூர் மாவட்டத்தில் சிப்காட் உருவாக்க வேண்டும் என்ற எண்ணமும் உள்ளது. வெகுவிரைவில், திருவாரூர் மாவட்டத்தில், விவசாயம் சார்ந்த தொழிற்சாலைகள் மற்றும் பெண்கள் அதிகளவில் பணிபுரியும் வகையிலான தொழிற்சாலைகள் அமைக்க திராவிட நாயகனின் தமிழக அரசால் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகிறது என தொழில் முதலீட்டு, ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர்.டி.ஆர்.பி.ராஜா தெரிவித்தார்.

முன்னதாக திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் ஒன்றியம், முக்குளம் சாத்தனூர் ஊராட்சியில், கருவாக்குறிச்சி கிராமத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் ரூ.77.89 இலட்சம் மதிப்பீட்டில் 2194.78 சதுர அடி பரப்பளவில் கட்டப்படவுள்ள புதிய கிராம அறிவு மையம் கட்டடம் கட்டுவதற்கு தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர்.டி.ஆர்.பி.ராஜா அவர்களும், சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே.கலைவாணன்அவர்களும், மாவட்ட ஆட்சித்தலைவர், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி வாரிய கழகத்தலைவர் முன்னாள் அமைச்சர் உ.மதிவாணனும், மாவட்ட ஆட்சியர் மோகனச்சந்திரன் ஆகியோர் அடிக்கல் நாட்டினார்கள்.

அதனைத்தொடர்ந்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் காணொலி காட்சி வாயிலாக திறந்து வைக்கப்பட்ட திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், மூவாநல்லூர் கிராமத்தில் ரூ.20.90 கோடி மதிப்பீட்டில் 33000 மெ.டன் கொள்ளளவு கொண்ட மேற்கூரை அமைப்புடன் கூடிய நவீன நெல் சேமிப்புதளத்தில் நெல் இருப்பு விவரம் குறித்து தொழில் முதலீட்டு, ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர்.டி.ஆர்.பி.ராஜா, சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே.கலைவாணன் ஆகியோர் பார்வையிட்டனர்.

இந்நிகழ்வில், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கழக சட்டத்திருத்தக் குழு உறுப்பினர் பி.ராஜமாணிக்கம், அவைத் தலைவர் தன்ராஜ், ஒன்றிய செயலாளர்கள் டி.எஸ்.டி. முத்துவேல் , நா.கவியரசு , சித்தேரி சிவா, கே.வி.கே.ஆனந்த்,நகர செயலாளர் வீரா கணேசன், மன்னை நகர மன்ற தலைவர் மன்னை த.சோழராஜன்,அறங்காவல் குழு தலைவர் இளவரசன்,முன்னாள் ஒன்றியக்குழு தலைவர் சோம.செந்தமிழ் செல்வன், மாணவரணி அமைப்பாளர் பகலவன், பாசறை ராஜேந்திரன், பி.ஜி.ஆர்.ராஜாராமன், வீர.தேசபந்து, மாவட்ட இளைஞர் அணி வீ.கே.முருகானந்தம், வரத்தகர் சங்க தலைவர் கே.வி.ஆனந்த, தகவல் தொழில்நுட்ப அணி பைங்காநாடு இளையராஜா, மாவட்ட பிரதிநிதி நல்லிக்கோட்டை கருணாநிதி மற்றும் அரசு அலுவலகர்கள் பங்கேற்றனர்.

அமைச்சர் சா.சி.சிவசங்கர் தலைமையில், புதிய விரிவான சிற்றுந்து திட்டம் 2024 தொடர்பாக

திருச்சி, தஞ்சாவூர், சேலம் மற்றும் ஈரோடு மண்டலங்களுக்குட்பட்ட மண்டல அலுவலர்கள் ஆய்வுக்கூட்டம்!

வட்டாரப் போக்குவரத்து அலுவலர்களும் பங்கேற்பு!

பெரம்பலூர்,பிப்.26- போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தலைமையில், புதிய விரிவான சிற்றுந்து திட்டம் 2024 தொடர்பாக திருச்சி, தஞ்சாவூர், சேலம் மற்றும் ஈரோடு ஆகிய மண்டலங்களுக்குட்பட்ட மண்டல அலுவலரகள் மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம், பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது.

முதன்மை செயலாளர், போக்குவரத்து மற்றும் சாலை பாதுகாப்பு ஆணையர் சுன்சோங்கம் ஜடக் சிரு, பெரம்பலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் கிரேஸ் பச்சாவ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் தமிழ் நாடு அரசின் சார்பில் செயல்படுத்தப்படவுள்ள புதிய விரிவான சிற்றுந்து திட்டம் - 2024 மூலம் இது வரை எத்தனை புதிய வழித்தடங்கள் தேர்வு செய்ப்பட்டுள்ளது என்பது குறித்தும், தேர்வு செய்யப்பட்ட வழித்தடங்களில் எவையெல்லாம் மாவட்ட அரசிதழில் வெளிவந்துள்ளது என்பது குறித்தும் ஒவ்வொரு மண்டலங்களுக்குட்பட்ட மாவட்டங்கள் வாரியாக போக்குவரத்துத்துறை அமைச்சர் ஆய்வு செய்தார். மேலும், ஒவ்வொரு மாவட்டத்திலும் சிற்றுந்து இயக்குவது தொடர்பாக எத்தனை விண்ணப்பங்கள் வரப் பெற்றுள்ளது என கேட்டறிந்த போக்குவரத்துத் துறை அமைச்சர், சிற்றுந்து திட்டம் குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தி அவர்களிடமும் கருத்துக்களை கேட்டு சிற்றுந்து இயக்கம் தேவைப்படும் வழித்தடங்கள் குறித்தும் ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும் என அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள் மற்றும் மண்டல அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

பின்னர், போக்குவரத்துத்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையின்படி, புதிய மினி பேருந்து திட்டம் அறிவிக்கப்பட்டதன் அடிப்படையில், அதற்காக ஒப்பந்தம் வெளியிடப்பட்டு புதிய மனுக்களும் பெறப்பட்டு வருகின்றது. இதுதொடர்பாக தமிழ் நாடு முழுவதும் ஆய்வு நடைபெற்று வருகிறது. கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு கூட சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கு ஆய்வு நடத்தப்பட்டது.

தமிழ்நாட்டின் மத்திய மாவட்டங்களுக்குட்பட்ட பகுதிகளில் மினி பேருந்து இயக்கம் தொடர்பாக எவ்வளவு விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளது, அதற்காக என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை குறித்த இன்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுடைய ஆட்சி காலத்திலேயே மினி பேருந்து இயக்கம் என்ற சிறப்பான திட்டம் தொடங்கப்பட்டது. தற்போது மேலும் இத்திட்டம் விரிவுப்படுத்தப்பட்டு, பேருந்துகள் செல்ல முடியாத குக்கிராமங்களுக்கும் மினி பேருந்து சேவையை நீட்டித்து, அதன் மூலம் அந்த பகுதியைச் சேர்ந்த மக்கள் போக்குவரத்து வசதி பெறுவதுடன், மற்ற இடங்களுக்கும் போக்குவரத்து இணைப்பு கிடைக்கும் என்பதற்காக மினி பேருந்து சேவை திட்டம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் மே 2025 மாதத்திற்கு முன்பாக இத் திட்டத்தினை முழுவதுமாக முடித்து செயல்படுத்துவது தான் போக்குவரத்து துறையின் முக்கிய நோக்கமாக உள்ளது. அதற்காக இந்த ஆய்வுக்கூட்டம் நேற்று நடைபெற்றது.

பெரம்பலூர் மாவட்டத்தில் ஏற்கனவே 62 வழித்தடங்களுக்கான மினி பேருந்து அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மினி பேருந்து இயங்காத வழித்தடங்களின் உரிமையாளர்களுக்கு முறையாக தகவல் தெரிவிக்கப்பட்டு அவர்கள் விரும்பினால் அந்த வழித்தடத்தில் தொடரவும், முடியாத பட்சத்தில் வழித்தடத்தினை ரத்து செய்து புதிதாக வழித்தடம் துவங்கப்பட்டு மினி பேருந்து சேவை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். இச்சேவைகளை சிறப்புடன் செம்மைபடுத்துவதற்காக புதிய மினி பேருந்து வழித்தடங்களை அப்பகுதிக்குட்பட்ட வட்டார போக்குவரத்து அலுவலர்கள் ஆய்வு செய்து மாவட்ட ஆட்சித்தலைவர் மூலமாக ஒப்புதல் பெறும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

நாகை மாவட்டம் திருமருகல் தெற்கு ஒன்றியம் திருப்பயத்தங்குடி ஊராட்சியில் ரூ 1.27 கோடி மதிப்பில் கிராம அறிவு மையம் கட்டடம் கட்டும் பணிகளுக்கு நாகை மாவட்ட ஆட்சித்தலைவர் .ப.ஆகாஷ், தாட்கோ தலைவர் உ.மதிவாணன் ஆகியோர் அடிக்கல் நாட்டினார்கள். உடன் நாகை சட்டமன்ற உறுப்பினர் ஜெ.முகம்மது ஷா நவாஸ், திருமுருகன் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் ஆர்.டி.எஸ்.சரவணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் க. இராஜேந்திரன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பி. என். கார்த்தி திருவாரூர் மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் உ நெல்சன்மண்டேலா, ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் முருகராஜ் கிளை செயலாளர் சதீஷ்குமார் மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் ஆலோசனையின் பேரில் பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றிய கழக செயலாளர் பி.எஸ்.சரவணன் ஏற்பாட்டில் ஒன்றிய செயற்குழு உறுப்பினர்களின் ஆலோசனை கூட்டம் பையர்நத்தம் ஒன்றிய கழக முகாம் அலுவலகத்தில் நடைபெற்றது.கூட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72 வது பிறந்தநாள் விழாவை மக்களுக்கு பயனுள்ள வகையில் நலத்திட்ட உதவிகள் வழங்கி கொண்டாடுவது,ஒன்றிய அரசைக் கண்டித்து ஆர்ப்பாட்டங்கள் நடத்துவது மற்றும்கழகஆக்கப்பணிகள்குறித்துகலந்தாலோசிக்கப்பட்டது.நிகழ்வில்ஒன்றியகழகஅவைத்தலைவர்தா.மனோகரன்,மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் தாமோதிரன்,மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள் செல்வராஜ்,சக்திவேல்,சண்முகம், ஜான்அக்பர், ஆபிஸ்,ராஜேஸ்,ரவீந்திரன்,ஒன்றிய கழக நிர்வாகிகள் வே.செல்வன்,இராஜேந்திரன்,பன்னீர்செல்வம்,இரவி மற்றும் கிளைக்கழக செயலாளர்கள், வாக்குச் சாவடி முகவர்கள்,உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.